# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.370/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | குமார்கிருஷ்ணன் | த–பெ | கிருஷ்ணன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 69/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | இந்தியன் வங்கி மேலாளர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2025**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வருகிறேன். இந்தியன் வங்கியில் பணியாற்றி தற்போது பணி ஓய்வில் உள்ளேன். அசா1 எனது மனைவி. கடந்த 20.03.2015 அன்று வெள்ளிக்கிழமை இரவு 8–8.10 மணியளவில் நான் வீட்டில் டிவி பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது வெளியே என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஆனால் சத்தம் கேட்டது உடனே வெளியே வந்து பார்த்தபோது எனது மனைவி வீட்டு வாசலில் இருசக்கர வாகனத்தை ஏற்றும் போது அவரது கழுத்தில் அணிந்திருந்த 11 பவுன் தங்க செயினை நபர் ஒருவர் அறுத்துச்சென்றுவிட்டார். எங்கள் வீட்டின் அருகில் இருந்த காட்டுப் பகுதிக்குள் சென்று விட்டார். ஓடி வந்து நாங்கள் பார்ப்பதற்குள் அவர் அங்கிருந்து ஓடி விட்டார். எனது மனைவியிடம் கேட்டதற்கு வீட்டிற்குள் இருசக்கர வாகனத்தை வைக்கும்போது கழுத்தில் அணிந்திருந்த தாலி செயினை தன்னுடைய விசையை பயன்படுத்தி பறித்து சென்று விட்டார் என்று எனது மனைவி என்னிடம் சொன்னார். பின்னர் அவசர போலீஸ்க்கு தொடர்பு கொண்டோம். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அவர்கள் காட்டுப்பகுதியில் தேடிப்பார்த்தும் அவரை பிடிக்கமுடியவில்லை. பின்னர் காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது. **கையொப்பம் அசாஆ 2.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

புகாரை யார் எழுதியது என்றால் காவல் நிலையத்தில் உள்ள எழுத்தர் எழுதினார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் நான் போன் செய்தபோது போலீசார் வீட்டிற்கு வந்தவர்கள் என்னை சம்பவம் அன்று வீட்டின் முன்பு விசாரணை செய்தார்கள். அதன்பின்பு தான் நாங்கள் புகார் அளித்தோம் என்றால் சரிதான். அதன்பின்பு என்னை விசாரணை செய்யவில்லை. சம்பவ இடமானது

இருட்டாக இருந்தது என்றால் அன்று சரிதான் தெருவிளக்கும் எறியாமல் இருந்தது. வீட்டிற்கு எதிரே சுப்ரமணியன், சொக்கலிங்கம், செந்தில் குமார் ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். புகாரில் எதிரி ஆர்எஸ்பதி காட்டிற்குள் சென்றதாக புகாரில் உள்ளது என்றால் சரிதான். திருடன் திருடன் என்று எனது மனைவி சத்தம் போட்டவுடன் என்னை தவிர வேறு யாரும் வரவில்லை என்றால் மற்றவர்கள் லேட்டாக வந்தார்கள். மனைவி என்னிடம் செயினை அறுத்துக்கொண்டு சென்றவரின் அடையாளங்களை சொன்னாரா என்றால் சொன்னார் வளந்தவர் என்றும் சிவப்பாக இருப்பார் என்றும் சொன்னார் மற்றபடி யார் என்று எனக்கு தெரியாது. வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்றும் எனது மனைவி அளித்த பொய் புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.11 20:11:05 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.370/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அங்கயற்கண்ணி | க–பெ | குமார்கிருஷ்ணன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 62/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | டெய்லர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2025**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து டெய்லர் வேலை செய்து வருகிறேன். கடந்த 20.03.2015 அன்று வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணியளவில் திருச்சி மெயின் ரோடு பர்மா காலனி அருகில் இருந்த பெண்கள் தையல் கடையை பூட்டி விட்டு டிவிஎஸ் Streak TN63 5829 என்ற என்னுடைய வாகனத்தில் நான் வீட்டிற்கு சென்றேன். எங்கள் வீட்டின் காம்பவுண்டு கேட்டை திறந்து வாகனத்தை உள்ளே ஓட்டினேன். அப்போது இருட்டாக இருந்தது. அப்போது உயரமாக பச்சை கலரில் கர்சிப்போன்ற துணியை முகத்தில் கட்டிக்கொண்டு எனது அருகில் வந்து கழுத்தில் அணிந்திருந்த 11 பவுன் தங்க செயினை கழட்டி எடுத்தார். திருடன் திருடன் நான் சத்தம் போட்டவுடன் அவர் கத்தியைக்கொண்டு மிரட்டி விட்டு எங்கள் வீட்டின் அருகில் இருந்த முந்திரி காட்டில் எனது கணவர் வருவதற்குள் ஓடி சென்றுவிட்டார். உயரமாக இருந்தார். அனுமானமாக 25 வயது இருக்கும். பார்த்தால் அந்த நபரை அடையாளம் காட்ட முடியுமா என்றால் சுருட்ட முடி வளத்தியாக இருந்தார் அவர் முகத்தில் துணி கட்டிருந்ததால் கண் மட்டும் தான் எனக்கு தெரிந்தது. பின்னர் காரைக்குடி குற்றபிரிவு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1.** சாட்சி தற்சமயம் தனது கணவருடன் சென்று புகார் அளித்ததாக சொல்லுகிறார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பின்னர் போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். பின்னர் 6 மாதங்கள் கழித்து போலீசார் எங்களை தொடர்பு கொண்டு நகையை பெற்றுச்செல்லுமாறு சொன்னார்கள். அதன்அடிப்படையில் நீதிமன்றத்தில் மனு செய்து நகையை நிபந்தனையுடன் பெற்றுசென்றேன். புகைப்படத்தில் காண்பிக்கப்படும் நகை எனக்கு சொந்தமானது. புகைப்படம் சா.பொ1 ஆக குறியீட செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை எப்போது எங்கே விசாரணை செய்தார்கள் என்றால் எனது வீட்டிற்கு மறுநாள் காலையில் வந்தார்கள் மற்றும் கடைக்கு 2,3 நாட்கள் கழித்து மாலையில் வந்து விசாரணை செய்தார்கள். சம்பவ இடமானது இருட்டாக இருந்தது என்றால் அன்று அமாவாசை என்பதால் இருட்டாக இருந்தது. என் வீட்டிற்கு எதிரே சுப்ரமணியன், செந்தில்நாதன் ஆகியோர் வீடுகள் இருந்தது என்றால் சரிதான். புகாரில் கத்தியை வைத்து மிரட்டியதாக எதுவும் சொல்லவில்லை என்றால் கையில் கத்தி இல்லை. புகாரில் சம்பவத்திற்கு பின்பு ஆர்எஸ்பதி காட்டிற்குள் ஓடியதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் திருடன் திருடன் என்று சத்தம் போட்டேன் என்றால் சரிதான். சத்தம் போட்டபோது எனது கணவரை தவிர வேறு யாரும் சம்பவ இடத்திற்கு வந்ததாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் தேவேந்திரகுமார், புயல் ராமன் ஆகியோர் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். நபரின் முகத்தில் கட்டிருந்த துணியின் பெயர் தெரியவில்லை. முகத்தில் கட்டிருந்ததை வைத்து அடையாளம் காட்டினால் அதே போல் வேறு நபர்கள் இருக்கலாம் என்றால் சரிதான். புகார் கொடுக்க யார் யார் சென்றீர்கள் என்றால் நானும் எனது கணவர் மற்றும் அவருடைய நண்பர். என்னுடைய நகையை நான் எப்போது பெற்றுசென்றேன் என்று சரியாக தெரியவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.11 20:11:12 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி